வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 268/2021

வழக்கு சாட்சி- **அ.சா.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராமசாமி | : | தொழில் | காய்கறி வியாபாரம் |
| கிராமம் | திருக்காட்டுப்பள்ளி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 57/2024 |

(எதிரி ஆஜர்.)

**<u>நாள் : 19.09.2024</u>**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகின்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது நான் அளித்ததுதான். (**அந்த பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3/அ.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி கையெழுத்தை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. பூண்டிமாதா கோவில் ஆற்றுப்பாலம் அருகில் உள்ள எனது கடையில் வைத்து மேற்படி கையெழுத்தை செய்தேன். மேற்படி இடத்தில் நடந்த விபத்து தொடர்பாக நான் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 08.08.2021 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நாகாச்சி ஆர்ச் அருகில் நடந்த சாலை விபத்து சம்மந்தமாக திருக்காட்டுப்பள்ளி போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவைகள் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகசரில் நானும், விக்னேஷ்வரன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாக போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து, எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பகுதி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**